2004 ஜுலை 30]

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, தேவகோட்டை நகராட்சியில், இளைஞர்களுக்கானப் பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம், புளியந்துறை இடையே உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. நா. சந்திரமோகன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. நா. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் உள்ள புதுப்பட்டினம் ஊராட்சிக்கும், புளியந்துறை ஊராட்சிக்கும் இடையில் உள்ள உப்பனாற்றில் போக்குவரத்துப் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள பாலம், சீர்காழி தொகுதிக்கு உட்பட்ட புதுப்பட்டினம் ஊராட்சிக்கும், புளியந்துறை ஊராட்சிக்கும் இடையில் குறுக்கிடும் உப்பனாற்றின் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலமாகும். பாலம் கட்டக் கோரியுள்ள சாலை, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இச்சாலை ஆணைக்காரன்சத்திரம்– மகேந்திரபள்ளி அரசுச் சாலையில் கி.மீ. 0.4–ல் பிரிந்து புளியந்துறை கிராமம் செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இந்த ஒன்றியச் சாலையின் நீளம் 2.40 கி.மீ. ஆகும். புளியந்துறை கிராமம், இந்தச் சாலையில் 2.40 கி.மீ.–ல் உள்ளது. இந்தச் சாலை ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் மேம்பாடு செய்யப்பட உள்ளது. புதுப்பட்டினம் கிராமம், புத்தூர்–புதுப்பட்டினம் அரசுச் சாலையை ஒட்டி அமைந்துள்ளது. புளியந்துறை மற்றும் புதுப்பட்டினம் கிராமங்களுக்கிடையில் 200 மீட்டர் நீர்வழிப் பாதையில் உப்பனாறு குறுக்கிடுகிறது. உப்பனாற்றில் 200 மீட்டர் நீளத்திற்கு உயர்மட்டப் பாலம் அமைக்கவும் 0.80 கி.மீ. நீளத்திற்கு அணுகுசாலை அமைக்கவும் தோராயமாக ரூ.120.00 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணியினை, இந்த நிதியாண்டில், பணியின் முன்னுரிமையைப் பொறுத்தும், நபார்டு வங்கியின் கடனுதவியைப் பொறுத்தும் எடுத்துக்கொள்ளப் பரிசீலிக்கப்படும்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டுள்ள அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சிக்கும், புளியந்துறை ஊராட்சிக்கும் இடையே உள்ள உப்பனாற்றில் போக்குவரத்துப் பாலம் இல்லாததனால், கடந்த 20 ஆண்டுகளாகப் பொதுமக்கள் தினந்தோறும் ஆற்றில் கழுத்தளவு நீரில் நடந்து செல்லும் அவல நிலையைப் போக்க, இந்த ஆண்டிலேயே முன்னுரிமை அடிப்படையில், போக்குவரத்துப் பாலம் கட்டிக் கொடுக்க அனுமதி அளித்ததற்காக, கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பாகவும், புளியந்துறை மற்றும் புதுப்பட்டினம் ஊராட்சிகளின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.